குழந்தைகள், ஆண், பெண் இருபாலரும் எத்தனை பேர் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 42 மன வளர்ச்சி குன்றியோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் 16 இல்லங்கள் ஆண்களுக்காகவும், 19 இல்லங்கள் பெண்களுக்காகவும், 7 இல்லங்கள் இருபாலருக்காகவும், ஆக மொத்தம் 42 இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இல்லங்கள்மூலம் 1,640 பேர் மொத்தம் பயன் பெற்று வருகிறார்கள். மதுரை மாவட்டத்தில் மட்டும் பயன் பெறுகின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை மொத்தம் 360 என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 276, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

276—

பொறியியல் கல்லூரி

***38198—திரு. கே. பொன்னுசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாராபுரம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் 576 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அரசு பொறியியல் கல்லூரிகள் 10 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அரசு நிதி

2015 செப்டம்பர் 16]

உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள் 3 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுயநிதி பொறியியல் கல்லூரிகள் மொத்தம் 546 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகள் 17. ஆக மொத்தம் 576 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிக எண்ணிக்கையில் பொறியியல் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில் திருப்பூர் மாவட்டத்தில் 10 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருப்பூருக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் 74 கல்லூரிகள் உள்ளன. ஆகவே, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் மட்டுமே 84 பொறியியல் கல்லூரிகள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அங்கே 40,000 மாணவர்கள் பொறியியல் கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

முற்பகல் 10-30

அதோடுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் 2,93,722 பேர் பொறியியல் படிப்பு படிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே மாணவர்களுக்கு ஏற்கெனவே பொறியியல் கல்லூரியில் படிப்பதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய இந்த வேளையில், திருப்பூர் மாவட்டம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில், புதியதாக ஒரு பொறியியல் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசிக்கு விருந்தாக, நோய்க்கு மருந்தாக இருப்பவர் தெய்வம். தன் பசியைக் கருதாமல் பிறருக்குக் கொடுப்பவர்கள் தெய்வத்தின் தெய்வம் என்கின்ற வகையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்களுக்காக விருந்தாகவும், மருந்தாகவும் வாழ்வளித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய மலர்ப் பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

எனது தாராபுரம் தொகுதியிலே உள்ள மாணவ, மாணவிகள் தொலைவில் உள்ள கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல் போன்ற வெளியூர்களுக்குச் சென்று, பொறியியல் படிப்பு படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. தாராபுரம் தொகுதியிலே, 4 கிலோ மீட்டர் தொலைவிலே 20 வருடங்களாக இயங்காமல் உள்ள அரசு கூட்டுறவு நூற்பாலையில் 61 ஏக்கர் நிலம் உள்ளது. அதேபோல, 2 கிலோ மீட்டர் தூரத்தில் ஐ.டி.ஐ. அருகிலே அரசுக்குச் சொந்தமான நிலம் 8 ஏக்கர் உள்ளது. எனவே, தாராபுரம் தொகுதியில், பொறியியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், கிராம ஊராட்சியாக இருந்தால் 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. நகராட்சி எல்லைக்குட்பட்ட இடமாக இருந்தால் 2.5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்திலும் 2.5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல், ஆசிரியர் மற்றும் பணியாளர் ஊதியம் தொடரும் செலவினமாக 36 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. தொடராச் செலவினமாக, அதாவது இயந்திரங்கள் வாங்குவதற்கு, கணினிகள் வாங்குவதற்கு, அறைகலன்கள், நூலகப் புத்தகங்கள், கட்டடங்கள் கட்டுவது போன்ற பணிகளுக்கு 60 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆக மொத்தம் ஒரு பொறியியல் கல்லூரி துவங்க வேண்டுமென்று சொன்னால், 106,64,39,000/- ரூபாய் தேவைப்படுகிறது.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே நிலம் இருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய மாணவர்கள் விண்ணப்பம் செய்து, அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலமாக ஒற்றைச் சாளர முறையில், அதாவது Single Window System *மூலமாகத்தான் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மட்டும்தான் அந்தந்தக் கல்லூரிகளில் தனியாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெறும். ஆனால்,*

2015 செப்டம்பர் 16]

பொறியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், மாநிலம் முழுக்க மதிப்பெண்கள் அடிப்படையில், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், ஒற்றைச் சாளர முறையில் மட்டுமே பொறியியல் கல்லூரி சேர்க்கை நடைபெறுகிறது.

ஆகவே, திருப்பூர் மாவட்டத்தில், தாராபுரம் பகுதியில் ஒரு பொறியியல் கல்லூரி ஆரம்பித்தால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மாணவர்கள் மட்டுமே படிக்க முடியாது. யார் யாரெல்லாம் விண்ணப்பம் செய்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலமாக Single Window System மூலமாக சேர்க்கை நடைபெற்று வருகிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு வேண்டிய இடங்களைப் பூர்த்தி செய்வதற்கு, மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்பு ஏற்கெனவே இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு 4 புதிய பொறியியல் கல்லூரிகளைத் தந்து, கூடுதலாக மாணவர்கள் படிப்பதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே எதிர்காலத்தில், தேவைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி அவர்கள்.*

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்சிமை பொருந்திய, கேட்பதைக் கொடுக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், (மேசையைத் தட்டும் ஒலி) கேட்பதைக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதி, திசையன்விளை பேரூராட்சியில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்று இயங்கி வருகிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் இல்லை.

அந்தப் பகுதியில் உள்ள அதிகமான குக்கிராமங்களிலிருந்து ஏழையெளிய மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயின்று வருகிறார்கள். அதற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பு கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வந்து ஆய்வு செய்து, "அந்தப் பகுதியில் அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லை. தனியார் யாராவது இடம் கொடுக்க முன்வந்தால் கல்லூரி கட்டப்படும்" என்று தெரிவித்தார்கள். எனவே, திசையன்விளை பேரூராட்சியில், பதினான்காவது வார்டில், எனக்குச் சொந்தமான 5.25 ஏக்கர் இடம், சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ளதை, நான் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு இனாமாக எழுதிக் கொடுத்து, பட்டா மாற்றமும் செய்தாகிவிட்டது. இன்னும் அந்த இடத்தில் கட்டடம் கட்டப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கேட்கப்பட்டிருக்கிற அந்தக் கேள்வியின் நோக்கம், அந்த உறுப்புக் கல்லூரிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டும் என்பதாகும். திசையன்விளை கிராமத்தில் ஏற்கெனவே மனோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி ஆகும். அது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்பட்டு, ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி. அங்கே மூன்று வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. நிலம் இல்லாத காரணத்தால் இதுவரை கட்டடம் கட்டப்படாமல் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 5.25 ஏக்கர் நிலத்தை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக அரசாங்கத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு,*

2015 செப்டம்பர் 16]

இந்த ஆண்டு பல்கலைக்கழகத்தின் மூலமாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

277—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***55082—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாணியம்பாடி தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், பீமகுளம், நாயக்கனூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூரார் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் பீமகுளம் மற்றும் நாயக்கனூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கி செயல்பட்டு வந்த பீமகுளம்-ரெட்டியூர் கிராமிய விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயலிழந்த நிலையில், 28-6-1980 ஆம் நாளன்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு 137-ன்கீழ் கலைக்கப்பட்டது. எனவே, மீண்டும் இந்தச் சங்கத்தினைச் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், பீமகுளம் கிராமத்தில் உள்ள 708 உறுப்பினர்களுக்கு ரூ.27.21 இலட்சம் நகைக் கடன்களும், ரூ.5.15 இலட்சம் பயிர்க் கடன்களும், அதுபோலவே நாயக்கனூர் கிராமத்தில் உள்ள 619 உறுப்பினர்களுக்கு ரூ.40.16 இலட்சம் நகைக் கடன்களும், ரூ.70.10 இலட்சம் பயிர்க் கடன் உள்ளிட்ட அனைத்துக் கடன் தேவைகளும் ஆலங்காயம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்மூலம் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஆலங்காயம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கிளை, சத்திரம்